RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com




THILLAI MAIL
# தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 323
VOLUME: 4 ISSUE: 323
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (6-5-2025) செவ்வாய்க்கிழமை
PUDUCHERRY(6-5-2025) TUESDAY
செய்திக்கு:94426 34795




# சாகித்திய அகாதமி, காமராசர் கலைக்கல்லூரி இணைந்து கிராமிய நிகழ்ச்சியை நடத்தின




புதுச்சேரி, மே 6–

சாகித்திய அகாதமி மற்றும் கலிதீர்த்தாள்குப்பம் பெருந்தலைவர் காமராசர் கலைக்கல்லூரி இணைந்து 'கிராமத்து மக்களிடம் மானுடம் போற்றும் இரு கவிஞர்களின் தாக்கம்' என்ற தலைப்பில் கிராமிய நிகழ்ச்சியை நடத்தின.

பெருந்தலைவர் காமராசர் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் ந.ஜெ. சரவணன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் சு. கனகவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாகித்ய அகாதமி பொதுக்குழு உறுப்பினர் பெ. பூபதி மையக்கருத்துரை வழங்கினார். தமிழ்ப் பேராசிரியர் தி. அன்புச்செல்வன் வாழ்த்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியை மா. சுஜாதா பாவேந்தரும் பெண் உரிமையும் என்ற தலைப்பிலும், வில்லியனூர் கஸ்தூரிபா மகளிர் கல்லூரிப் பேராசிரியர் ப. விவேகானந்ததாசன் மானுடம் போற்றும் பாவேந்தர் படைப்புகள் என்ற தலைப்பிலும் புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரியின் பேராசிரியை அ. மாலதி சிறார் இலக்கியத்தில் ம.இலெ. தங்கப்பா என்ற தலைப்பிலும் பெருந்தலைவர் காமராசர் கலைக் கல்லூரியின் பேராசிரியை க. சவுந்தரவள்ளி இயற்கை ஆர்வலர் ம. இலெ. தங்கப்பா என்ற தலைப்பிலும் கருத்துக்களை வழங்கினர்.

முடிவில் தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் அரங்க.மு. முருகையன் நன்றியுரை ஆற்றினார்.